1989 பிப்ரவரி 20] [திரு. கே. ஆர். இராமசாமி]

கொள்ள முடியவில்லை. நிச்சயமாக இந்த ஆசிரியர்கள் பிரச்சினையில் தெளிவான ஒரு முடிவுக்கு அரசாங்கம் வரவேண்டும் என்று நான் விரும்புகிறேன்.

(முற்பகல் 9-40)

மின் துறையைப் பொறுத்தவரையில் ஊராட்சிகளுக்கு, பஞ்சாயத்துகளுக்குத் தெரு விளக்குகள் போடுவதற்கு இப்போது அதிகாரங்கள் இருக்கின்றன. ஆனால் அதைச் சிறப்பாக பஞ்சாயத்துக்கள் செய்ய முடியாத நிலைமையில் நலிவுற்று இருக்கின்றன. எனவே, தெரு விளக்குகள் அமைக்கும் திட்டத்தை அரசாங்கமே ஏற்று நடத்தினால் இன்னும் சிறப்பாக இருக்கும் என்று நான் எண்ணுகிறேன்.

நான் தற்போது கண்ணன்குடி ஊராட்சி ஒன்றியத்தின் தலைவராக இருக்கிறேன். இங்கே உள்ள சட்டமன்ற உறுப்பினர்கள் ஒன்றியங்களுக்குச் செல்லும்போது தகுந்த மரியாதை அவசியமாக வேண்டும். இதை நிச்சயமாக அங்கே இருக்கக்கூடிய தலைவர்கள் யாரும் கொடுக்க மறுக்கவில்லை. முந்தைய அரசு செய்த அத்தனை காரியங்களையும் மறுக்கும் எண்ணத்திலேயே இதையும் எண்ணுகிறார்கள் என்று நான் எண்ணுகிறேன்.

ஊராட்சி ஒன்றியங்களைப் பொறுத்தவரையில் வறட்சிக்கு இலக்காகும்போது வரும் திட்டங்களான D.P.A.P., R L.E.G.P போன்ற திட்டங்கள் முழுமையாக மத்திய அரசினுடைய நிதியிலேயே இயங்குகின்றன. இன்றைக்கு ஊராட்சி ஒன்றியங்களினுடைய நிலைமையில், மத்திய அரசின் முழு மானியத்திலேயே இயங்கக்கூடிய நிலைமையில் இருக்கின்றன. இதை மாற்றி தாங்கள், இந்த அரசின் திட்டங்களாகப் போதிய நிதி ஆதாரங்களைத் தந்து சிறப்பிக்குமாறு நான் உங்களை அன்போடு கேட்டு கொள்கிறேன். வாய்ப்புக்கு நன்றி, வணக்கம்.

## 6. ஒழுங்குப் பிரச்சினை.

### சட்டமுன் வடிவுகளின் நகல்கள் அவையில் வைக்கப்படுதல்.

**திரு. எஸ். திருநாவுக்கரசு :** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, அவை உறுப்பினர்களின் உரிமையைப் பாதிக்கிற ஒரு பிரச்சினையை இங்கே ஒழுங்குப் பிரச்சினையின் மூலமாகத் தங்கள் கவனத்திற்குக் கொண்டு வர விரும்புகிறேன்.

[திரு. எஸ். திருநாவுக்கரசு] [1989 பிப்ரவரி 20

இன்றைக்கு மது விலக்கு ஆயத் தீர்வை பற்றிய 2 சட்டமுன் வடிவுகள் அவையில் வருவதாக முன்மொழியப்பட்டுள்ளன. அதிலே சட்ட அமைச்சர் அவர்கள் முன் மொழிந்த சட்டமுன்வடிவின் விவரங்கள் அடங்கிய அறிக்கை அவையில் வைக்கப்பட்டிருக்கின்றன. மாண்புமிகு முதலமைச்சர் அவர்கள் பெயரால் அவருடைய பாராளுமன்றச் செயலாளர் அறிவித்த சட்டமுன்வடிவு என்ன என்பது பற்றி அவையில் மேஜையில் வைக்கப்படவில்லையே ; அது வைக்கப்பட வேண்டாமா ? அது அவை உறுப்பினர்களின் உரிமையைப் பாதிக்கிறது அதற்குத் தங்களுடைய தீர்ப்பினை எதிர்பார்க்கிறேன்.

**மாண்புமிகு பேரவைத் தலைவர் :** அது குறித்து அறிக்கை நேற்றே அனைவருக்கும் அனுப்பப்பட்டிருக்கிறது.

**திரு. எஸ். திருநாவுக்கரசு :** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, சட்டமன்ற உறுப்பினர்களின் வீட்டுக்கு அனுப்புவது என்பது வேறு. சட்ட அமைச்சர் அவர்கள் இங்கேயும் கொடுத்திருக்கிறார்கள். அதையும் தான் வீட்டுக்கு அனுப்பியிருக்கிறீர்கள். கவன ஈர்ப்பு, ஒத்தி வைப்புத் தீர்மானம் போன்ற அனைத்தையும் வீட்டுக்கு அனுப்பியிருக்கிறீர்கள். ஆனால் அதை மட்டும் இங்கே டேபிளில் வைக்கிறீர்கள். அதைப்போல வீட்டுக்கு அனுப்பியிருந்தாலும் இங்கே சட்டமன்றத்திலே வைத்தால்தான் அது சட்டசபையினுடைய பொருளாக "Property of the House" ஆகும். நீங்கள் டேபிளில் இங்கே பிளேஸ் செய்தால் தான் வருமே தவிர, வீட்டுக்கு அனுப்புவது மட்டும் போதாது, இனி மேல் இங்கே வைக்க நடவடிக்கை எடுக்குமாறு கேட்டுக்கொள்கிறேன்.

**மாண்புமிகு பேரவைத் தலைவர் :** அது தொடர்பாக என்னுடைய குறிப்புரை :

"Provided that in case of a **Government Bill, along with the** notice sufficient number of copies of the **Bill shall be sent to** the Secretary for Circulation to the Members".

**திரு. எஸ். திருநாவுக்கரசு :** Circulation to the Members means circulation to the Assembly. எல்லாவற்றையும் வீட்டுக்கு அனுப்பிவிட்டால் போதுமா ? இங்கே மேஜையில் ஒன்றுமே வைக்க வேண்டியதில்லையா ?

**மாண்புமிகு பேரவைத் தலைவர் :** அவைக்கு வருவதற்கு முன்னாலேயே வீட்டுக்கு முன்கூட்டியே தருவது தவறு என்கிறீர்களா ?

திரு. எஸ். திருநாவுக்கரசு : முன் கூட்டித் தருவது தவறு என்று சொல்லவில்லை ; அது உறுப்பினர்களுக்கு வசதியாகத் தான் இருக்கிறது. ஆனால் நடைமுறையை நான் சொன்னேன். இது பெரிய பிரச்சினை இல்லையே, இங்கே 'பிளேஸ்' செய்து விட்டால் சரியாகப் போய்விடுகிறது.

மாண்புமிகு பேரவைத் தலைவர் : உங்களுடைய கோரிக்கையைத் தக்கவாறு கவனித்து ஆவன செய்கிறோம்.

மாண்புமிகு திரு. எஸ். ஜெ. சாதிக்பாட்சா : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, உறுப்பினர்களுக்குச் சுற்றறிக்கை அனுப்பியது அவர்களுக்கு ஒருவேளை தெரியாமல் இருக்கலாம். எனவே, அது போன்ற தவறு ஏற்படாது என்று தாங்கள் கூறி விட்டீர்கள். என்றாலும் உறுப்பினர்களுக்கு உங்கள் செகரட்டேரியட் மூலமாக அனுப்புவதை அவர்கள் நோட்டீஸ் ஆகக் கருத வேண்டும் என்பதுதான் முறை என்று தெரிவித்துக் கொள்கிறேன்.

திரு. பி. எச். பாண்டியன் : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, வீட்டுக்கு என் இந்த மசோதாக்களை அனுப்புகிறீர்கள் என்றால் "Bill to be introduced Confidential" என்று அதில் போட்டு அனுப்புகிறீர்கள். இங்கே காலை 8 மணிக்கு வைத்து விட்டால் வெளியே ஒரு வேளை தெரிந்து விடலாம் என்ற காரணத்திற்காக அந்த முறை பின்பற்றப்படவில்லையோ என்று நான் எண்ணுகிறேன்.

* மாண்புமிகு திரு. துரைமுருகன் : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, எதிர்க்கட்சித் துணைத் தலைவர் அவர்கள் இப்போதுதான் எதிர்க்கட்சியாகப் போயிருக்கிறார்கள். நான் எதிர்க்கட்சியில் இருந்தவன். வழக்கமாக பில் காப்பிகள் வீட்டுக்குத்தான் வரும். ஆனால் எல்லா பில்களும் டேபிள் மீது வைக்கப்படுவது கிடையாது. அதை மாண்புமிகு திரு. திருநாவுக்கரசு அப்போது அமைச்சராக இருந்ததால் கவனித்து இருக்கமாட்டார்.

திரு. எஸ். திருநாவுக்கரசு : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, நீங்கள் புதிதாக அமைச்சராக இருப்பதால் இந்த விதிமுறைகள் உங்களுக்குத் தெரியாமல் இருந்திருக்கலாம். ஏனென்றால் நான் ஏற்கனவே அமைச்சராக இருந்திருக்கிறேன்,

இப்போது எதிர்க்கட்சியாக இருப்பதால் இரண்டு அனுபவமும் எனக்கு இருக்கிறது. அவருக்கு ஒரு அனுபவம் இப்போதுதான் புதிதாக வந்திருக்கிறது. பேரவைத் தலைவர் அவர்களே, நான் உங்களிடத்திலே தெரிவிக்க விரும்புவது, வீட்டிற்கு அனுப்புவது என்பது ஒன்று. வீட்டிற்கு அனுப்பியிருக்கிறீர்கள், எனக்கும் கிடைத்திருக்கிறது. மாண்புமிகு சட்ட அமைச்சர் அவர்கள் சொன்னார்கள், தெரியவில்லையென்று: தெரிகிறது. ஆனால் இங்கே வைக்காமல், எங்களுக்கு வீட்டிற்கு அனுப்புவதால் பத்திரிகைகளிலே பிரசுரிக்க முடியாது. பத்திரிகைக்காரர்க ளெல்லாம் இங்கே இருக்கிறார்கள். அவர்களால் என்ன சட்ட முன்வடிவு வந்திருக்கிறது என்று எப்படி எழுத முடியும்? எனவே இங்கே வைத்தால்தான வரும்.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்**: அருள்கூர்ந்து உங்களுடைய குறை என்ன என்று சொல்லுங்கள். பத்திரிகையாளர்களுடைய குறைகளைப் பற்றி அருள்கூர்ந்து பேச வேண்டாம். சட்ட முன் வடிவு அறிமுகமானதும் பத்திரிகையாளர்களுக்கு உடனடியாகக் கொடுக்கப்படும்.

**திரு. எஸ். திருநாவுக்கரசு**: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, அதைத்தான் கூறுகிறேன். பத்திரிகைக்காரர்களெல் லாம் அவைக்கு வெளியிலே இல்லை: அவைக்கு உள்ளேதான் இருக்கிறார்கள். அவைக்குள்ளே அந்த உரிமையைப் பத்திரிகைக் காரர்களுக்குக் கொடுக்கிறபோது அதே உரிமையை உறுப்பினர் களுக்குக் கொடுத்து, உறுப்பினர்களின் மேஜையின்மேல் வைக்க வேண்டும். அதில் என்ன கஷ்டம் இருக்கிறது? தவறு நடந் திருக்கிறது என்று சொன்னால், அதைத் திருத்திக் கொள்வதில் என்ன கஷ்டம்? ஏன் அவ்வளவு டிஃபன்ஸ்? பேரவைத் தலைவர் அவர்களே, ஒரு சிறு மாறுதல் அல்லது மறந்திருக்கலாம். சிறிய தவறாக இருக்கலாம், சரி, வைக்கிறோம் என்று சொன்னால், முடிந்து விடுகிறது.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்**: இது பற்றிக் கவனித்து ஆவன செய்யப்படும.

1989 பிப்ரவரி 20]

**திரு. எம். அப்துல் லத்தீப்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, ஒரு தவறான விளக்கம் அவைக் குறிப்பில் இடம் பெற்றுவிடக் கூடாது என்பதற்காக நானும் என்னுடைய சார் பாகச் சிலவற்றைச் சொல்ல விரும்புகிறேன். 'சர்க்குலேஷன்' என்றால் அவையிலே வைப்பதுதான் பொருள் என்று மாண்புமிகு திரு. திருநாவுக்கரசு அவர்கள் சொன்னார்கள். அது சரியல்ல. 'சர்க்குலேசன்' என்று சொன்னால் 'சுற்றறிக்கை'.

It should be circulated as among the Members so that they may have sufficient time to go into the details of the various provisions.

ஒரு நாளைக்கு முந்தியே அவர்களுக்கு 'சர்க்குலேட்' செய்தால் தான் அவர்கள் வீட்டிலேயிருந்து படித்து, அதைப்பற்றி அறிந்து கொண்டு வந்து பேச வசதியாக இருக்கும் என்பதற்காகத்தான் அது சர்க்குலேட் செய்யப்படுகிறது.

Circulation does not mean placing on the Table of the House. It is different

(குறுக்கீடு) நான் முடித்துவிடுகிறேன். ஏன் ரொம்ப அவசரப் படுகிறீர்கள்? ஆகையினாலே அந்த அர்த்தத்தில் வரவில்லை. வீட்டிற்கும் அனுப்பப்படவேண்டும்; அவையிலும் வைக்கப்பட வேண்டும் என்று மாண்புமிகு திரு. திருநாவுக்கரசு அவர்கள் கோருகிறார்கள் என்று சொன்னால் அது மாண்புமிகு அவை முன்னவர் அவர்கள் மற்றும் அவைத் தலைவர் அவர்கள் ஆகியோ ரால் தீர்மானிக்கப்பட வேண்டிய விஷயம். இரண்டு இடத்திலும் வைக்கப்படவேண்டுமென்பதை நான் எதிர்க்கவில்லை. இந்தப் பொருளைத்தான் அவர்கள் தவறாகச் சொல்கிறார்கள் என்று சொல்லுகிறேன்.

**திரு. எஸ். திருநாவுக்கரசு:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, வீட்டிற்கு அனுப்ப வேண்டாம் என்று நான் சொல்ல வில்லை.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** அதுகுறித்து நான் கவனித்து ஆவன செய்வதாக ஏற்கெனவே சொல்லியிருக்கிறேனே. (குறுக்கீடு) இருக்கட்டுமே ஒரு சிறிய விளக்கம்.

**திரு. எஸ். திருநாவுக்கரசு:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, "Not to be published" என்றுதான் இதிலே போட் டிருக்கிறது. "Not to be published—Confidential"

என்று கான்பிடன்ஷியலாகத்தான் அனுப்பியிருக்கிறீர்கள். ஆனால் இங்கே வைத்தால்தான் அதை பிரஸ்காரர்களெல்லாம் எடுத்துப் பார்த்து அவர்கள் போட முடியும். என்ன சட்டமுன் வடிவு வருகிறது என்று அப்பொழுதுதான் அவர்களுக்குத் தெரியும்.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்** : அருள்கூர்ந்து பத்திரிகையாளர்களைப் பற்றிப்பேச வேண்டாம். பத்திரிகையாளர்களை நாங்கள் கவனித்துக் கொள்கிறோம்.

திரு. பி. எச். பாண்டியன் : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, பில்லுக்கு மேலே ஒரு சீலே குத்தியிருக்கிறார்கள், "Bill to be introduced—Confidential". என்று,

5. சட்டமுன்வடிவுகள் — தொடர்ச்சி.

(இ) ஊராட்சிகள் (திருத்த) சட்டமுன்வடிவு, 1989—தொடர்ச்சி.

* திரு. சாதர் பாட்சா என்கிற வெள்ளைச்சாமி: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, மாண்புமிகு உள்ளாட்சித் துறையினுடைய அமைச்சர் அவர்கள் ஊராட்சிகள் திருத்தச் சட்ட முன்வடிவை அறிமுகம் செய்ததை ஆதரித்து எனது கருத்துக்கள் சிலவற்றைத் தெரிவிக்க விரும்புகிறேன்.

நான் இந்த அவையிலே பேசுவதற்கு முன்னால், அறிவுலக மேதை பேரறிஞர் அண்ணா அவர்களை நினைவு கூர்ந்து என்னுடைய வணக்கத்தைத் தெரிவித்து, என்னை ஆளாக்கிய தலைவர், என்னுடைய குடும்பத் தலைவர், பசும்பொன் தேவர் திருமகன் அவர்களுக்கு வணக்கத்தையும் நன்றியையும் கூறி, இந்த அவையிலே பேசுவதற்கு நல்லதொரு வாய்ப்பினை வழங்கிய என்னுடைய இதய வேந்தன், தமிழினத் தலைவன் டாக்டர் கலைஞர் அவர்களுக்கு நன்றியைக் கூறி, என்னுடைய சில கருத்துக்களைத் தெரிவிக்க விரும்புகிறேன்.

1958 ஆம் ஆண்டு, இந்தச் சட்டத்தை உருவாக்கிய காலத்தில் பல நிபுணர்களால், பல பொருளாதார நிபுணர்களால், வல்லுனர்களால், இதற்கென பல ஆண்டுகள் பெரிய திட்டங்களையெல்லாம் தீட்டினார்கள், அதற்கு முன்னால் ஊராட்சி வளர்ச்சி தேசிய திட்டமாக இருந்த, Shadow Block ஆக இருந்ததை, மக்க